மாலை பதிப்பு
# சுபீட்சம்
நிகழ்நிலை பத்திரிகை; அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே
செய்திகளை உடனுக்குடன் தெரிந்துகொள்ள supeedsam.com
14.09.2022 புதன்கிழமை
supeedsam.com supeedsam@gmail.com

## ஐ.நா. அமர்வில் இலங்கை தொடர்பாக 7நாடுகளின் வரைபு



ஜெனீவாவில் தற்போது நடைபெற்று வரும் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 51வது கூட்டத்தொடரில் இலங்கை தொடர்பாக வரைபொன்று முன் மொழியப் பட்டுள் ளது. இலங்கையில் நல்லிணக்கம், பொறுப்புக்கூறல் மற்றும் மனித உரிமைகளை மேம்படுத்தும் நோக்கில் 18 முன்மொழிவுகள் குறித்த வரைபில் சேர்க்கப்பட்டுள்ளன. அமெரிக்கா, பிரித்தானியா, கனடா மற்றும் ஜேர்மனி உள்ளிட்ட ஏழு நாடுகளால் இந்த வரைபு தயார் செய்யப்பட்டுள்ளது.

## மஹிந்தவை கொலை செய்ய சதி நால்வருக்கு குற்றப்பத்திரிகை



முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை கொலைச் செய்ய சதி செய்ததாக கூறி முன்னாள் பொலிஸ் அத்தியட்சர் லக்ஷ்மன் குரே உள்ளிட்ட நான்கு பிரதிவாதிகளுக்கு எதிராக குற்றப் பகிர்வுப் பத்திரம் கையளிக்கப்பட்டுள்ளது. கொழும்பு மேல் நீதிமன்ற நீதிபதி மகேன் வீரமன் முன்னிலையில் இந்த குற்றப் பகிர்வுப் பத்திரம் இவ்வாறு கையளிக்கப்பட்டுள்ளது. பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் குற்றம் சுமத்தி இந்த குற்றப் பகிர்வுப் பத்திரம் கையளிக்கப்பட்டுள்ளது. மஹிந்த ராஜபக்ஷ ஜனாதிபதியாக கடமையாற்றிய கடந்த 2009 பெப்ரவரி முதலாம் திகதிக்கும் அம்மாதம் 14 ஆம்

02

## கட்டாய ஓய்வு வயதெல்லை சுற்றறிக்கை வெளியீடு

அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயதை 60 ஆக வரையறுப்பதற்கான அரசாங்கத்தின் தீர்மானத்தை அமல்படுத்தும் சுற்றறிக்கை, பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் உள்ளூராட்சி அமைச்சினால், இன்று (14) வெளியிடப்பட்டது. 2023ஆம் ஆண்டு ஜனவரி 1ஆம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில் அனைத்து அரச ஊழியர்களின் கட்டாய ஓய்வு வயதெல்லை 60 ஆக கருதப்படும் என்று அமைச்சரின் செயலாளர் எம்.எம்.பி.கே.மாயாதுன்னே வெளியிட்ட சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

02

## கடன் பிரச்சினைகள் மேலும் அதிகரிக்காமல் தடுக்கும் பொறுப்பு சீனாவிற்கு உள்ளது



இலங்கை உள்ளிட்ட குறைந்த வருமானம் கொண்ட நாடுகள் எதிர்நோக்கும் கடன் பிரச்சினைகள் மேலும் அதிகரிக்காமல் தடுக்கும் பொறுப்பு சீனாவிற்கும் ஏனைய பெரும் கடன் வழங்கும் நாடுகளுக்கும் உள்ளது என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது. வளர்ந்து வரும் சந்தையில் 25 விகிதமான நாடுகளும் குறைந்த வருமானம் கொண்ட நாடுகளில் 60 விகிதமான நாடுகள் கடன் நெருக்கடியில் இருப்பதாக சர்வதேச நாணய நிதியத்தின் முகாமைத்துவப் பணிப்பாளர் கிறிஸ்டினா ஜோர்ஜீவா தெரித்துள்ளார்.

02

## ஜனாதிபதி ரணிலின் கடிதம் நஸீர் அஹமட் மூலமாக ஐக்கிய அரபு இராச்சிய அமீரிடம் கையளிப்பு



(ரக்ஸனா)

இலங்கை ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்ஹ ஐக்கிய அரபு இராச்சியத்தின் அமீருக்கு எழுதியனுப்பிய எழுதிய விஷேட கடிதம் கையளிக்கப்பட்டுள்ளது. ஜனாதிபதியின் விஷேட தூதுவராக ஐக்கிய அரபு இராச்சியம் சென்றுள்ள சுற்றாடல்துறை அமைச்சர் நஸீர் அஹமட், அந்தக் கடிதத்தை ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிநாட்டு அமைச்சரும் சர்வதேச

02

## ரணிலின் அரசில் தமிழருக்கு நிரந்தர தீர்வு கிடைக்காது




( வி.ரி. சகாதேவராஜா)

மொட்டு கட்சியின் பின்னால் இருக்கும் ரணிலின் அரசாங்கம் தமிழ் மக்களுக்காக நியாயமான நீதியான நிரந்தரமானதீர்வைதரும்என்று ஒருபோதும்எதிர்பார்க்க முடியாது .இதனை சர்வதேசமே பெற்றுத்தர வேண்டும் இவ்வாறு ஐநா கவன ஈர்ப்பு போராட்டத்தில் நேற்றுமுன்தினம் உரையாற்றிய தமிழ் தேசிய

02

## நியூஸிலாந்தில் இலங்கையர்கள் வாழலாம்




(ரக்ஸனா)

இலங்கையைப் போல் இரு மடங்கு பரப்பளவுள்ள நியூஸிலாந்தில் இலங்கையர்கள் வந்து வாழலாம். ஏற்கெனவே 20 ஆயிரம் இலங்கையர்கள் அங்கு வசிக்கின்றார்கள். நியூஸிலாந்து உயர் ஸ்தானீகராலயத்தின் பாதுகாப்பு மற்றும் புலம்பெயர்வுக்கான அதிகாரி ப்ரெட் ஷீல்ட்ஸ் இலங்கையைப் போல் இரு

02

## ஆசிரியர்கள், சுகாதாரத் துறை ஊழியர்களுக்கு ஐந்தாண்டு விடுமுறை பொருந்தாது

ஹஅரசு ஊழியர்களுக்கு 5 ஆண்டுகள் சம்பளமற்ற விடுமுறை வழங்கும் அரசாங்கத்தின் சுற்றறிக்கை பாடசாலை ஆசிரியர்கள், சுகாதாரத்துறை ஊழியர்கள் மற்றும் தொழில்நுட்ப சேவைகள் போன்ற பிரிவுகளுக்கு பொருந்தாது என்று அதிகாரி ஒருவர் தெரிவித்தார். இந்த விடயம் குறித்து ஆங்கில ஊடகமொன்றுக்கு தெரிவித்துள்ள பொது நிர்வாக அமைச்சின் செயலாளர் எம்.எம்.பி.கே.மாயாதுன்னே, இந்த நீண்ட கால விடுமுறைக்கான சுற்றறிக்கையை அரசாங்கம் பல்வேறு நிறுவனங்களின் மேலதிகமான ஊழியர்களை விடுவிப்பதற்காகவே அறிமுகப்படுத்தவுள்ளதாக தெரிவித்தார். நாட்டுக்குத் தேவையான அத்தியாவசியப் பிரிவு ஊழியர்களுக்கு இது பொருந்தாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். தாங்கள் தற்போது இந்த சுற்றறிக்கையை உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளதாக அவர் மேலும் கூறினார்.



100 நாள் செயல் முனைவுப் போராட்டத்தின் 45 ஆவது நாள் நிகழ்வுகள் இன்று காலை (14) வாகரை பிரதேசத்தின் வட்டவான் இறால் ஓடை கடற்கரைப் பகுதியில் இடம்பெற்ற போது..



## ரணிலின் அரசில் தமிழருக்கு

கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாநகர சபை மேயர் தியாகராஜா சரவணபவன் தெரிவித்தார். அனைத்து உலக மனித உரிமை ஸ்தாபனம் மற்றும் இனப் படுகொலைகளுக்கு எதிரான தமிழர்கள் கூட்டமைப்பு இணைந்து ஐநா கூட்டத்தொடர் நடக்கும் மண்டபத்துக்கு முன்பாக திரு.முருகதாஸ் தலைமையிலே நேற்றுமுன்தினம் கவன ஈர்ப்பு போராட்டம் நடைபெற்றது அப் போராட்டத்தில் இலங்கையில் இருந்து சென்ற பிரமுகர்கள் உரையாற்றினார்கள். அங்கு மேயர் சரவணபவன் மேலும் உரையாற்றுகையில்.. இலங்கையில் கடந்த காலங்களில் தமிழர்களின் மீது நடத்தப்பட்ட மிலேச்சத்தனமான இன அழிப்பு செயற்பாடுகள் தொடர்ச்சியாக அரங்கேறி வருகின்றது

ஐக்கிய நாடுகள் ஸ்தாபனம் இது விடயத்தில் காலம் தாழ்த்தாமல் குறுகிய கால இடைவெளிக்குள் இதற்கு தீர்வு தரவேண்டும். திட்டமிட்ட இனப்படுகொலைக்கு நியாயமான தீர்வு வேண்டும் .இதற்காக இலங்கை அரசாங்கத்திற்கு எதிராக ஐக்கிய நாடு சபையில் உள்ள அனைத்து நாடுகளும் அழுத்தம் கொடுக்க வேண்டும். தமிழர்களின் இனப்பரம்பலை கூறு போட்டு மாற்றி அமைக்க ,மாறி மாறி வந்த அரசாங்கங்கள் பிரதேச ரீதியாக அழிவு நடத்தி மாற்றுவதற்காகவே சிங்கள குடியேற்ற திட்டங்களை உருவாக்கினார்கள். 1966 ஆம் ஆண்டு அம்பாறை மாவட்டத்தில் கல்லோயா குடியேற்ற திட்டம். அதேபோன்று திருகோணமலை மாவட்டத்தில் சேருவில குடியேற்ற திட்டம். எப்படியாக கிழக்கு மாகாணத்தில் தொடர்ச்சியாக இந்த சிங்கள பேரினவாதம் குடியேற்ற திட்டங்களை ஏற்படுத்தி வருகின்றது. அதேபோன்று சத்துருக் கொண்டானில் 256 பேரும் வந்தாறுமூலையில் 156 பேரும் கொத்தணி முறையில் படுகொலை செய்யப்பட்டார்கள்.

இப்படி திருமலை வரை அம்பாறை மாவட்டங்களிலும் கொத்தணி கொத்தணியாக தமிழ் மக்கள் மிலேச்சத்தனமாக கொல்லப்பட்டார்கள். இறுதியாக முள்ளிவாய்க்கால் பேரவலம். லட்சக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டார்கள். 1948 ஆம் ஆண்டு இலங்கை சுதந்திரம் பெற்றது ஆனால் 1950 ஆம் ஆண்டு சிங்கள பேரினவாதம் இந்த சிங்கள ஆக்கிரமிப்பை ஒட்டுமொத்தமாக சிறுபான்மைக்கு எதிராக அந்த நடவடிக்கை முதல் முதலிலேயே அரங்கேறியது. வடக்கு கிழக்கில் பல ஆயிரம் படுகொலைகள் இடம் பெற்றன . யாழ்ப்பாணம் நூலகம் எரிக்கப்பட்டது. முல்லைத்தீவு திருகோணமலை மாவட்ட எல்லை கிராமங்களில் திட்டமிட்டு சிங்கள குடியேற்றங்கள் ஏற்படுத்தப்பட்டன. வடகிழக்கு தமிழர் தாயகம் மண் இல்லாத ஒழிக்கப்பட வேண்டும் என்று திட்டமிட்டார்கள். 2009இல் முள்ளிவாய்க்காலில் ஒரு லட்சத்து 46 ஆயிரத்து 679 பேர் வலிந்து காணாமல் ஆக்கப்பட்டார்கள். இதுவரைக்கும் அதற்கு நீதி இல்லை. அதற்கு நீதி வேண்டும் என்று தங்களது பிள்ளைகளை திருப்பித் தர வேண்டும் என்று வடபுலத்திலே தாய்மார்கள் 2000 நாட்களாக போராடி வருகிறார்கள். இதுவரைக்கும் எந்த தீர்வும் கிடைக்கப்பெறவில்லை. சிங்கள பேரினவாதம் எமக்கு தீர்வு தரும் என்று நாங்கள் எதிர்பார்க்கவில்லை. சர்வதேசம் ஒன்று தான் எமக்கான தீர்வை பெற்றுத்தர வேண்டும். பேச்சுவார்த்தைகள் அன்றும் இன்றும் கிழித்து எறிந்து தடுத்து அடக்கி ஒதுக்கியதே வரலாறு. உலகில் தமிழர் தேசத்தை நியாயமான தேசமாக மிளிரச் செய்ய வேண்டும். நீதிக்கான வழிமுறையை ஏற்படுத்த வேண்டும். அதற்காக நாம் ஒன்றுபடுவோம். என்றார்.

## மஹிந்தவை கொலை செய்ய சதி

திகதிக்கும் இடைப்பட்ட காலப்பகுதியில், குருணாகலையில் அவர் கலந்துகொண்ட மக்கள் சந்திப்பொன்றின் மீது குண்டுத் தாக்குதல் நடாத்தி ஜனாதிபதி உள்ளிட்டோரை கொலை செய்ய சதிச் செய்ததாக சட்ட மா அதிபர் இந்த நால்வருக்கு எதிராகவும் குற்றம் சுமத்தியுள்ளார். இந் நிலையில் குற்றப் பத்திரிகை கையளிக்கப்பட்ட பின்னர் பிரதிவாதிகளுக்காக மன்றில் ஆஜரான சட்டத்தரணிகள், பயங்கரவாத தடை சட்டத்தின் திருத்தங்கள் பிரகாரம், குறித்த சட்டத்தின் கீழ் குற்றம் சாட்டப்படுபவர்களுக்கு பிணையளிக்கும் அதிகாரம் மேல் நீதிமன்றுக்கு இருப்பதாக குறிப்பிட்டு பிணை கோரி வாதங்களை முன் வைத்தனர். பிரதிவாதிகள் கடந்த 13 வருடங்களாக விளக்கமறியலில் இருக்கும் நிலையில் அதனை விஷேட காரணியாக கருதி பிணையளிக்குமாறு அவர்கள் கோரினர். எனினும் வழக்குத் தொடுநர் குறித்த கோரிக்கைக்கு கடும் எதிர்ப்பு முன் வைத்தது. இந் நிக்லையில் பிணைக் கோரிக்கை தொடர்பில் எதிர்வரும் ஒக்டோபர் 17 ஆம் திகதி தனது தீர்மானத்தை அறிவிப்பதாக நீதிபதி மகேன் வீரமன் அறிவித்த நிலையில், வழக்கு அன்றைய தினம் வரை ஒத்தி வைக்கப்பட்டது. முன்னதாக முன்னாள் அமைச்சர் ஜெயராஜ் பெர்ணான்டோ புள்ளே படு கொலை வழக்கிலும் பொலிஸ் அத்தியட்சர் லக்ஷ்மன் குரே பிரதிவாதியாக குறிப்பிடப்பட்டிருந்த போதும், அவரை அண்மையில் கம்பஹா மேல் நீதிமன்றம் விடுவித்து விடுதலை செய்து உத்தரவிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## கட்டாய ஓய்வு வயதெல்லை

அரசியலமைப்பின் மூலமும் நீதித்துறை சட்டத்தின் மூலமும் நிர்ணயிக்கப்பட்டுள்ள நீதிச் சேவை உத்தியோகத்தர்களைத் தவிர, அனைத்து அரச உத்தியோகத்தர்களுக்கும் இது ஏற்புடையதாகும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. 60 வயதுக்கு மேல் தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள மற்றும் 2022.12.31 திகதி அல்லது அதற்கு முன்னர் 60 வயது பூர்த்தியாகும் ஊழியர்களுக்கு அவர்களின் விருப்பப்படி டிசெம்பர் 31ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் ஓய்வு பெற வாய்ப்பளிக்கப்படும் என்று சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. அவ்வாறு ஓய்வுபெறவுள்ள ஊழியர்கள் உரிய நடைமுறைப்படி தங்களது ஓய்வு விண்ணப்பங்களை அதிகாரியின் ஒப்புதலுடன் ஓய்வூதிய பணிப்பாளர் நாயகத்துக்கு சமர்ப்பிக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

## கடன் பிரச்சினைகள் மேலும் அதிகரிக்காமல் தடுக்கும் பொறுப்பு சீனாவிற்கு உள்ளது

குறிப்பாக, இலங்கைக்கு பொதுக் கடனாளிகள் விரைவாக பேச்சுவார்த்தையை மேற்கொள்வார்கள் என்றும் தனியார் கடன் வழங்குநர்கள் பேச்சுவார்த்தைக்கு வருவார்கள் என தான் நம்புவதாகவும் கிறிஸ்டினா ஜோர்ஜீவா கூறியுள்ளார். இலங்கையின் கடனை மறுசீரமைப்பது தொடர்பாக இந்தியா, சீனா மற்றும் ஜப்பான் ஆகிய நாடுகளுடன் லசார்ட் நிதி ஆலோசனைக் குழுபேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளதாக அரசாங்கம் நேற்று உறுதிப்படுத்தியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## ஜனாதிபதி ரணிலின் கடிதம் நஸீர் அஹமட் மூலமாக

விவகாரங்களுக்குப் பொறுப்பானவருமான மாட்சிமைமிகு அப்துல் பின் ஷெய்யத் அல் நஹ்யானிடம் கையளித்துள்ளார். இரு நாடுகளின் உறவுகளைப் பலப்படுத்துவது குறித்து ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க அக்கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார். அபூதாபியில் இடம்பெற்ற சந்திப்பில் பல தரப்பு விடயங்கள் குறித்து அமைச்சர் நஸீர் அஹமட்டும், ஐக்கிய அரபு இராச்சியத்தின் வெளிநாட்டு அமைச்சரும் கலந்துரையாடியுள்ளனர். இலங்கையின் பொருளாதார மேம்பாடுகளுக்கு ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஒத்துழைப்பை பலப்படுத்துவது குறித்தும் தற்போது இலங்கையில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடி குறித்தும் விளக்கிய அமைச்சர நஸீர் அஹமட், அதற்கான தீர்வுகள் குறித்தும் எடுத்துரைத்து ஐக்கிய அரபு இராச்சியத்தின் உதவிகளை பெறுவது தொடர்பில் அக்கறை செலுத்துமாறும் வேண்டிக் கொண்டார். மேலும், பிராந்திய மற்றும் சர்வதேசத்தில் ஐக்கிய அரபு இராச்சியத்தின் ஒத்துழைப்புக்களுடன் பல்துறைகளில் மேற்கொள்ள வேண்டிய அபிவிருத்திச் செயற்பாடுகள் பற்றியும் இச்சந்திப்பில் கலந்துரையாடப்பட்டது. இவ்வாறான விடயங்களுக்கு ஒத்துழைப்பதில் இலங்கைக்குள்ள ஆர்வங்களையும் அமைச்சர் தெளிவுபடுத்தினார். இச்சந்திப்பில் ஐக்கிய அரபு இராச்சியத்துக்கான இலங்கைத் தூதுவர் மஹாதேவி பீரிஸ/ம் கலந்துகொண்டார்.

## நியூஸிலாந்தில் இலங்கையர்கள் வாழலாம்

மடங்கு பரப்பளவையும் சுமார் 5 மில்லியன் மக்களையும் கொண்ட நியூஸிலாந்தில் இலங்கையர்கள் வந்து வாழலாம். ஏற்கெனவே அங்கு 20 ஆயிரம் இலங்கையர்கள் வாழ்கின்றார்கள் என கொழும்பிலுள்ள நியூஸிலாந்து உயர் ஸ்தானீகராலயத்தின் பாதுகாப்பு மற்றும் புலம்பெயர்வுக்கான அதிகாரி ப்ரெட் ஷீல்ட்ஸ் **(Brett Shields - Security and Migration Officer - New Zealand High Commission Colombo)** தெரிவித்தார். நியுஸிலாந்து உயர் ஸ்தானீகராலயத்தின் நிதியளிப்பினால் ஸ்தாபிக்கப்பட்ட, காத்தான்குடி பெண்களின் நீண்ட காலத் தேவையாக இருந்து வந்த உளநல ஆற்றுப்படுத்தல் நிலையமும் சுய கற்றல் மையமும் திறந்து வைக்கப்பட்ட நிகழ்வில் அவர் அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றினார்.

இந்நிலையம் செவ்வாய்க்கிழமை 13.09.2022 வைபவ ரீதியாகத் திறந்து வைக்கப்பட்டது. ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் அனீஸா பிர்தௌஸ் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் தொடர்ந்து உரையாற்றிய நியூஸிலாந்து உயர் ஸ்தானீகராலயத்தின் பாதுகாப்பு மற்றும் புலம்பெயர்வுக்கான அதிகாரி ப்ரெட் ஷீல்ட்ஸ் வேறு நூற்றுக்கணக்கான திட்ட முன்மொழிவுகள் நியுஸிலாந்து உயர்ஸ்தானீகராலயத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டிருந்தபோதும் நிதியுதவி அளிப்பதற்கு நியூஸிலாந்து உயர்ஸ்தானீகர் காத்தான்குடியில் பெண்களுக்கான இந்த உள நல ஆற்றுப்படுத்தல் மற்றும் சுய கற்றலுக்கான திட்டத்தைத் தெரிவு செய்தார். 5 மில்லின் மாத்திரமே சனத்தொகையைக் கொண்ட நியூஸிலாந்து நாடு இலங்கையைப் போல் இரு மடங்கு பரப்பளவைக் கொண்டது. அங்கு இலங்கையர்கள் வரவேற்கப்படுகின்றார்கள். ஏற்கெனவே எமது நியூஸிலாந்து நாட்டில் சுமார் 20 ஆயிரம் இலங்கையர்கள் வசிக்கின்றார்கள். இதை நான் ஏன் கூறுகின்றேன் என்றால் இலங்கையில் இருக்கும் மக்கள் நியுஸிலாந்துக்கு வரமுடியும் அங்கே வாழ முடியும். இங்கே அமர்ந்திருக்கக் கூடிய இன்றைய நிகழ்வில் பங்கு கொண்ட சிறுமிகள், இளம் பெண்கள் நியூஸிலாந்துக்கு வருவதை நான் ஊக்குவிக்கின்றேன். எதிர்காலத்தில் ஒரு சிலரை நியூலாந்தில் காண முடியும் என நம்புகின்றேன். அது ஒரு நீண்ட பயண வழிமுறையாக இருந்தாலும் அது நடக்கலாம். நடப்பதற்கு சாத்தியமுள்ளது. நான் அடுத்து வரும் நான்கு ஆண்டுகளுக்கு இங்கு இலங்கையிலிருந்து பணியாற்றுவேன். அந்த வேளையில் நான் மீண்டும் கிழக்குக்கு வந்து உங்களை சந்திப்பேன். இந்தத் திட்டம் வெற்றியளித்து உங்கள் வாழ்வு மேம்பட வேண்டும் என நான் அவாவுறுகின்றேன்." என்றார்.

# வலயக் கல்விப் பணிப்பாளருக்கு வரவேற்பும்

## கல்விச் சேவையில் ஓய்வு பெற்றவருக்கு கௌரவிப்பு நிகழ்வும்



(ஏ.எல்.எம்.ஷினாஸ்)

கல்முனை கல்வி வலய இஸ்லாம் பாட ஆசிரியர்கள் ஒன்றிணைந்து ஏற்பாடு செய்த புதிய வலயக்கல்வி பணிப்பாளரை வரவேற்கும் நிகழ்வும், கல்விச் சேவையில் 37 ஆண்டுகள் சேவையாற்றி ஓய்வு பெற்றுச்செல்லும் ஆசிரிய ஆலோசகரை பாராட்டி கௌரவிக்கும் நிகழ்வும் கல்முனை வெஸ்லி உயர்தர பாடசாலை நல்லதம்பி மண்டபத்தில் இஸ்லாம் பாட உதவி கல்வி பணிப்பாளர் ஏ.பி.நஸ்மியா ஸனூஸ் தலைமையில் இன்று (14.09.2022) நடைபெற்றது. கல்முனை வலயக் கல்விப் பணிப்பாளராக அண்மையில் பதவியை பொறுப்பேற்றுக் கொண்ட எம்.எஸ் சகுதுல் நஜீம் இஸ்லாம் பாட ஆசிரியர்களினால் பொன்னாடை போர்த்தி, நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டதுடன், இஸ்லாம் பாட ஆசிரியராகவும் ஆசிரிய ஆலோசகராகவும் கல்விச் சேவையில் 33 ஆண்டுகள் கடமையாற்றி ஓய்வு பெற்றுச் செல்லும் எஸ் சிராஜ/தீன், பொன்னாடை போர்த்தி வாழ்த்துப்பா வாசிக்கப்பட்டு நினைவுச் சின்னம் வழங்கி அதிதிகளினால் பாராட்டி கௌரவிக்கப்பட்டார். இந்த நிகழ்வில் பிரதிக் கல்விப் பணிப்பாளர்களான ஏ.எச்.எம். பௌசர், ஜாபிர், திருமதி ஜிஹானா ஆலிப், வெஸ்லி உயர்தர பாடசாலையின் அதிபர் எஸ். கலையரசன் உட்பட, வலயக் கல்வி அலுவலக உத்தியோகத்தர்கள், ஆசிரியர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

# ஒலிம்பிக் தீப தொடரோட்டம்



(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)

கிழக்கு மாகாண தமிழ் மாற்று திறனாளிகளின் பிரதேச செயலகங்களுக்கு ஊடான ஒலிம்பிக் தீப தொடரோட்டம் நேற்று (13) திகதி காந்தி பூங்காவில் நிறைவடைந்துள்ளது. கிழக்கு மாகாண தமிழ் மாற்றுத்திறனாளிகளுக்கான விளையாட்டு விழாவிற்கான ஒலிம்பிக் தீப தொடரோட்டம் வாகரை பிரதேச செயலகத்தில் நேற்று முன்தினம் ஆரம்பமாகி ஓட்டமாவடி பிரதேச செயலகத்தினை வந்தடைந்து, அதனைத்தொடர்ந்து ஓட்டமாவடி மத்தி பிரதேச செயலகத்தில் இருந்து கிரான் பிரதேச செயலகம், செங்கலடி பிரதேச செயலகம், ஏறாவூர் பிரதேச செயலகத்தில் நேற்றைக்கு முன்தினம் முடிவடைந்துள்ளது. நேற்று செவ்வாய்க்கிழமை வவுணதீவு பிரதேச செயலகத்தில் தீப தொடரோட்டம் ஆரம்பமாகி பட்டிப்பளை பிரதேசசெயலகம், வெல்லாவெளி பிரதேச செயலகம், களுவாஞ்சிகுடி பிரதேச செயலகம், ஆரையம்பதி பிரதேச செயலகம், காத்தான்குடி பிரதேச செயலகத்தினை வந்தடைந்து, அதனைத் தொடர்ந்து மண்முனை வடக்கு பிரதேச செயலக பிரிவிற்குட்பட்ட காந்தி பூங்காவில் நிறைவடைந்துள்ளது. இத்தீப தொடரோட்டத்தை பிரதேச மாற்றுத்திறனாளிகள் அமைப்பு, மாற்றுத்திறனாளிகள் சம்மேளனம் மற்றும் டேட்டா அமைப்பு என்பனவற்றின் ஒழுங்கமைப்பில் இடம்பெற்றுள்ளது. 2022 ஆம் ஆண்டிற்கான மாற்று திறனாளிகளுக்கான விளையாட்டு விழா இம்மாதம் 24 மற்றும் 25 திகதிகளில் வெபர் மைதானத்தில் இடம்பெறவுள்ளது. மாவட்ட மாற்றுத்திறனாளிகள் சம்மேளனத்தின் தலைவர் க.ஜீவராசா மற்றும் மாற்றுத்திறனாளிகள் அமைப்பின் பிரதிநிதிகள் மற்றும் சமூக ஆர்வலர்கலென பலரும் கலந்து கொண்டுள்ளனர்.

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் சரத்துக்களை மாற்றுதல் அல்ல சட்டமே மாற்றப்பட வேண்டும்

(சுமன்)

பயங்கரவாதத் தடைச் சட்டத்தில் உள்ள சரத்துக்களை மாற்றுதல் என்ற விடயத்தை விடுத்து இந்தச் சட்டத்தை முற்றமுழுதாக நீக்க வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு என இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணித் தலைவரும், கோரளைப்பற்றுப் பிரதேசசபை உறுப்பினருமான கி.சேயோன் தெரிவித்தார். பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கெதிராக கையெழுத்து சேகரிக்கும் வாகனப் பவணி பற்றி கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார். இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் மேற்கொள்ளப்பட்டிருந்த பயங்கரவாதத் தடைச் சட்டத்திற்கு எதிரான கையெழுத்து சேகரிக்கும் போராட்டமானது நாட்டில் ஏற்பட்ட அசாதாரண மற்றும் பொருளாதார சூழ்நிலைகளினால் தொடர்ந்து முன்னெடுக்க முடியாமல் போயிருந்தது. தற்போது நாட்டின் நிலைமை ஓரளவிற்கு வந்துள்ளமையாலும், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடர் ஆரம்பிக்கப்படவுள்ளமையினாலும் எம்மால் முன்னெடுக்கப்பட்ட இந்தப் போராட்டத்தினை மீண்டும் தொடர்ந்து முன்னெடுப்பதற்குத் தீர்மானித்து கடந்த 10ம் திகதி மாவிட்டபுரம் கந்தசாமி ஆலயத்தில் இருந்து வாகனப் பவணியாக ஆரம்பித்துள்ளோம். இந்தப் பயங்கரவாதத் தடைச் சட்டத்தினால் எமது நாட்டின் சிறுபான்மை இனம் மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கின்றது. அதிலும் தமிழ் மக்கள் இதனால் அதிகம் பாதிப்புற்றிருக்கின்றார்கள். இந்தச் சட்டத்தை நீக்க வேண்டும் என அரசியற் கட்சிகளும், மனித உரிமை அமைப்புகளும் மிகவும் போராடியதன் நிமித்தம் சர்வதேச மனித உரிமை அமைப்புகளிடமிருந்து பாரிய அழுத்தத்தின் மத்தியில் பயங்ககவாதத் தடைச்சட்டத்தில் உள்ள மனித குலத்திற்கு எதிரான சரத்துக்கள் நீக்கப்பட வேண்டும் என்பதுடன் பயங்கரவாதத் தடைச்சட்டம் முற்றாக நீக்கப்பட வேண்டும் என்ற கருத்து முன்வைக்கப்பட்டதன் விளைவாக 2018ம் ஆண்டு ஒரு திருத்தச் சட்டத்தை அரசாங்கம் கொண்டு வந்திருந்தது. இருந்த போதிலும் தற்போதுள்ள பயங்கரவாதத் தடைச்சட்டத்தில் உள்ளது போன்றே எவ்வித மாற்றங்களும் இல்லாமல் சில சில சரத்துக்களை மாற்றி இருப்பதை விட மோசமான சட்டமாகவே அது கொண்டு வரப்பட இருந்தது. எனவே இந்தச் சட்டத்தில் உள்ள சரத்துக்களை மாற்றுதல் என்ற விடயத்தை விடுத்து இந்தச் சட்டத்தை முற்றமுழுதாக நீக்க வேண்டும் என்பதே அனைவரின் விருப்பாகும் என்றார்.

அனைத்து விடயங்களும் மக்களுக்காகவே!



# இலங்கை மக்கள் வாழ வழியின்றி தவிக்கின்ற நிலையில் இலங்கை அகதிகள் தாயகம் திரும்ப முடியுமா?

**( வாஸ் கூஞ்ஞ )**

இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு வாழ்வதற்கே வழியின்றி தவிக்கின்ற நிலையிலும், நிலையற்ற ஒரு அரசியல் சூழல் நிலவும் இந்த சமயத்திலும் இலங்கையில் வாழ முடியாமல் தமிழகத்திற்கு மக்கள் அகதிகளாக வந்துகொண்டு இருக்கும் இந்த சூழ்நிலையில், ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் தமிழக அரசு அமைத்துள்ள ஒரு குழுவுக்கு போட்டியாக இலங்கை அரசை வலியுறுத்தி இருப்பது எமக்கு கவலையை உண்டு பண்ணியுள்ளதாக முகாம்களில் தங்கி வாழும் இலங்கை தமிழர்களில் அக்கறைக் காட்டிவரும் அமைப்பின் முக்கியஸ்தராக திகழும் கஸ்தம்பாடி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமணீல் வாழும் டேவிட் அனோஜன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பாக முகாம்களில் தங்கி வாழும் இலங்கை தமிழர்களில் அக்கறைக் காட்டிவரும் அமைப்பின் முக்கியஸ்தராக திகழும் கஸ்தம்பாடி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமில்; வாழும் டேவிட் அனோஜன் மேலும் தெரிவிக்கையில்

இலங்கையில் ஏற்பட்ட யுத்த சூழ்நிலையால் இந்திய தமிழ் நாட்டுக்கு தமிழர் இடம்பெயர்ந்து தற்பொழுது முகாம்களிலும் மற்றும் வெளியிலும் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

தற்பொழுது இவர்களை இலங்கைக்கு மீளவும் அழைத்து வருவதற்காக ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் நீண்ட காலமாக முயற்சிகள் எடுத்து வருவதற்கான நடவடிக்கைகள் எடுத்துக் கொண்டு வருகின்ற நிலையில் தற்பொழுது இன்றைய இலங்கை அரசு இது விடயத்தில் கவனம் செலுத்தியுள்ளது.

இது தொடர்பாக இந்திய முகாம்களில் வாழும் மக்களிடம் கருத்துக்கள் கேட்கப்பட்டபோது கஸ்தம்பாடி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமணீல் வாழும் டேவிட் அனோஜன் மேலும் கருத்து தெரிவிக்கையில்

தமிழகத்தில் மாண்புமிகு முத்துவேல் கருணாநிதி ஸ்டாலின் அவர்கள் முதல்வராக பொறுப்பேற்ற பின்பு நடைபெற்றுவரும் அரசும் அதன் செயல்பாடுகளும் அனைவராலும் வரவேற்கும் விதமாக உள்ளது.

சொல் வன்மையைவிட தனது செயல் வலிமையால் வியப்பூட்டும் விதத்தில் அனைவருக்குமான நல்லாட்சியை அவர் நடத்தி வருகிறார். இதில் தமிழகத்தில் புலம் பெயர்ந்து வாழும் இலங்கைத் தமிழர்கள் மட்டுமல்ல கடல் கடந்து வாழும் தமிழர்களும் விதிவிலக்கானவர்கள் அல்ல.

தமிழர்கள் அனைவரும் எங்கேஇ எந்த நாட்டில் வாழ்ந்தாலும் அவர்கள் அனைவரும் ஒரு தாய் மக்கள்தான் என்பதை மனதில் ஏற்றுஇ தமிழக தமிழர்களும், இலங்கைத் தமிழர்களும் இனத்தால்இ மொழியால், பண்பாட்டால்இ நாகரிகத்தால் ஒன்றுபட்டவர்கள்,

அவர்களுக்கு வேண்டிய உதவிகளை செய்துகொடுத்து அவர்களுக்காக என்றும் துணை நிற்போம் என்று கூறி பல்வேறு நலத்திட்ட அறிவிப்புகளை ரூ.317.7 கோடிக்கு அறிவித்து செயல்படுத்தி வருகிறார்.

தமிழகத்தில் கடந்த 30 ஆண்டுகளுக்கும் மேலாக முகாம்களில் வாழ்ந்து வரும் இலங்கைத் தமிழர்களின் வாழ்வில் மறுவாழ்வை ஏற்படுத்தும் விதமாக இந்த நலத்திட்டங்களை அறிவித்து அவை மக்களுக்கு விரைவாக கிடைக்க வேண்டும் என துரிதமாக செயல்பட்டும் செயல்படுத்தியும் வருகிறார்.

இந்த திட்டங்கள் யாவும் ஒரு தலைமுறை வாழ்வை முகாம்களில் விரக்தியுடன் கழித்த மக்களின் நம்பிக்கை விடியலாய் இருக்கிறது. தங்கள் பிள்ளைகளின் வாழ்விலும், புதிய தலைமுறையினரின் வளர்ச்சியிலும் இவை ஏற்றமிகு மாற்றங்களை ஏற்படுத்தும் விதமாக அமைந்துள்ளன. புதிய தலைமுறையினரின் கவுரவமான கண்ணியமான வாழ்வை இவை உறுதிப்படுத்துவதாகவும் உள்ளன.

முகாம்வாழ் பிள்ளைகளின் கல்வி மேம்பட பொறியியல், வேளாண், வேளாண் பொறியியல் மற்றும் முதுநிலை பயிலக்கூடிய மாணவ மாணவியருக்கு அனைத்து கல்விக் கட்டணம் மற்றும் விடுதிக் கட்டணம் ஆகிய அனைத்தையும் அரசே முழுமையாக ஏற்றுக்கொண்டுள்ளது.

கலை, அறிவியல் மற்றும் பட்டயப் படிப்பு படித்து வருகின்றவர்களுக்கு கல்வி உதவித் தொகை உயர்த்தி வழங்கப்பட்டு வருகிறது. அவர்களுக்கு தேவையான வேலைவாய்ப்பு தகுதியினை மேம்படுத்திட திறன் மேம்பாட்டுப் பயிற்சிகள் மறுவாழ்வு முகாம்களில் தொடங்கப்பட்டு நடந்து வருகிறது.

முகாம்களில் இயங்கிவரக்கூடிய சுய உதவிக் குழுக்களுக்கு சமுதாய முதலீட்டு நிதி வழங்கப்பட்டு அவர்கள் சிறு தொழில் தொடங்கி வாழ்வாதாரத்தை மேம்படுத்தவும் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது.

கடந்த 10 ஆண்டுகாலமாக உயர்த்தப்படாமல் இருந்த மாதாந்திர பணக்கொடை உயர்த்தி வழங்கப்பட்டுள்ளது. சமையல் எரிவாயு மற்றும் அலுமினியப் பாத்திரங்களுக்கு பதிலாக எவர்சில்வர் பாத்திரங்களும், கோ-ஆப்டெக்ஸ் வாயிலாக முகாம்வாழ் தமிழர்களுக்கு உயர்த்தப்பட்ட விலையில் தரமுள்ள ஆடைகளும் வழங்கப்பட்டு வருகிறது.

இதன்படி, முகாம்களில் வசிக்கும் அனைத்து ஆண்டுகளிலும் பயிலக்கூடிய இலங்கைத் தமிழ் மாணவர்களுக்கு இலவசக் கல்வி மற்றும் உயர்த்தப்பட்ட கல்வி உதவித் தொகைக்காக 4.35 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

முகாம்வாழ் தமிழர்களுக்கு பொருளாதார ரீதியில் கவுரவமான வாழ்க்கையை ஏற்படுத்திக் கொடுக்க 621 சுய உதவிக் குழுக்களுக்கு சமூக முதலீட்டு நிதியாக 6.15 கோடி ரூபாயும்இ 5இ000 இலங்கைத் தமிழர்களுக்கு சுயதொழில் மற்றும் வேலைவாய்ப்பை உருவாக்கவும்இ திறன் மேம்பாட்டுப் பயிற்சி, தொழிற்கல்விகள் மற்றும் வேலைவாய்ப்பு முகாம்களை நடத்துவதற்கு என 10 கோடி ரூபாயும் வழங்கப்பட்டுள்ளது.

அதேபோல், முகாம்களின் உடனடி அவசியத் தேவைகளை உடனுக்குடன் நிறைவேற்றித் தரும் நோக்குடன் இலங்கைத் தமிழர் வாழ்க்கைத் தரம் மேம்பாட்டு நிதிக்காக 5 கோடி ரூபாயும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு 10 கும் மேற்பட்ட நலத் திட்டங்கள் முழுமையான செயல்பாட்டிற்கு



வந்து நடைமுறைப்படுத்தப்பட்டும் வருகிறது.

மேலும், இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் அடிப்படைக் கட்டமைப்புகளை மேம்படுத்த தமிழ்நாடு முழுவதும் இருக்கக்கூடிய இலங்கைத் தமிழர் முகாம்களில் முதற்கட்டமாக 290 சதுர அடி கொண்ட 3,510 புதிய வீடுகள் கட்டப்பட்டு வருகிறது. குடிநீர், மின்சாரம், சாலை வசதி மற்றும் கழிவுநீர் கால்வாய் போன்ற அடிப்படை வசதிகளை மேம்படுத்துவதற்காக 30 கோடி ரூபாய் மதிப்பீட்டிலான பணிகளும் தொடங்கி நடைபெற்று வருகிறது.

இதன் ஒரு அங்கமாக, திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள தோட்டனூத்தில் 17 கோடியே 17 இலட்சம் செலவில் கட்டி முடிக்கப்பட்டுள்ள 320 வீடுகளை விரைவில் முதலமைச்சர் அவர்கள் திறந்துவைத்து பயனாளிகளுக்கு கையளிக்கவுள்ளார். தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர்களின் மறுவாழ்வுப் பணிகளை மட்டுமல்லாது அவர்களின் வாழ்வுரிமைக்கானத் திட்டங்களையும் செயல்படுத்துவதற்காக சிறுபான்மையினர் நலம் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர்கள் நலத்துறை அமைச்சர் செஞ்சி மஸ்தான் அவர்களின் தலைமையில் நலன் காக்கும் குழு ஒன்றையும் தமிழக அரசு அமைத்துள்ளது.


இந்தக் குழு, தமிழ்நாட்டில் வாழும் இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் 18 ஆயிரத்து 937 குடும்பங்களும் முகாம்களுக்கு வெளியே வசிக்கும் 13 ஆயிரத்து 553 குடும்பங்களையும் பாதுகாத்து மேம்படுத்துவதுடன், அவர்களில் பெரும்பான்மையானவர்களின் நீண்ட கால கோரிக்கையான இந்திய குடியுரிமையை பெற்றுக்கொடுப்பதற்கான சட்ட ரீதியான சாத்தியகூறுகளை ஆராய்வதற்கும்இ தங்கள் சொந்த விருப்பத்தில் இலங்கைத் திரும்ப விரும்பும் குறிப்பிட்ட சதவீதத்தினருக்கு உதவுவதற்கும் தமிழக அரசுக்கான செயல் திட்டத்தை உருவாக்குவதற்கான முன்மொழிவுகளை தயார் செய்து வருகிறது.

அனைத்தும் நம்பிக்கையோடு முன் நகரும் போது 'ஈழ அகதிகள் மறுவாழ்வுக்கழகம் எனும் அமைப்பு' (ஒவ்வர்) விடுத்த வேண்டுகோளுக்கமைய இந்தியாவில் உள்ள இலங்கை அகதிகள் இலங்கை வருவதை இலகுபடுத்துவதற்காக ஜனாதிபதியின் மேலதிக செயலாளர் சந்திமா விக்ரமசிங்க தலைமையிலான ஒரு குழு நியமிக்கப்பட்டுள்ளது என்ற செய்தி தமிழகத்தில் மறுவாழ்வு முகாம்களில் வசிக்கும் இலங்கைத் தமிழர்களிடம் அதிர்ச்சியளித்துள்ளது.

தமிழ்நாட்டில் தங்கள் சுய விருப்பத்தின் பேரில் நாடு திரும்ப விரும்பும் இலங்கைத் தமிழர்கள் தொடர்புடைய மாவட்ட ஆட்சித்தலைவர்களிடம் வெளிச் செல்லும் அனுமதி பெற்று எளிதாக நாடு திரும்ப முடிகிறது. 01.04.2002 முதல் 31.03.2022 வரை யுஎன்எச்சீஆர் உதவியுடன் 18, 014 பேர் இவ்வாறு நாடு திரும்பியுள்ளனர்.

கடவுச்சீட்டு மூலம் வந்து அவை காலாவதியாகி தங்கியிருப்பவர்களும் விசா கட்டணம் மற்றும் மிகைத் தங்கலுக்கான அபராதத் தொகையினை இந்திய அரசின் அனுமதியோடு தமிழக அரசு இனம்வாரியாகப் பிரித்து தள்ளுபடி செய்து அவர்கள் நாடு திரும்ப உதவுகிறது. இவ்வாறு இதுவரை 1597 நபர்கள் பயனடைந்துள்ளனர்.

சுய விருப்பத்தின் பேரில் நாடு திரும்ப இங்கு எந்த தடையும் இல்லாத நிலையில்இ தற்போது இலங்கையில் நிலவும் பொருளாதார நெருக்கடியால் மக்களின் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டு வாழ்வதற்கே வழியின்றி தவிக்கின்ற நிலையிலும்இ நிலையற்ற ஒரு அரசியல் சூழல் நிலவும் இந்த சமயத்திலும் இலங்கையில் வாழ முடியாமல் தமிழகத்திற்கு மக்கள் அகதிகளாக வந்துகொண்டு இருக்கும் இந்த சூழ்நிலையில்இ ஈழ ஏதிலியர் மறுவாழ்வுக் கழகம் தமிழக அரசு அமைத்துள்ள ஒரு குழுவுக்கு போட்டியாக இலங்கை அரசை வலியுறுத்தி இன்னொரு குழுவை அங்கு அமைக்கக் காரணம் என்ன? அகதி மக்களின் விருப்பத்திற்கு மாறாக அந்த அமைப்பினர் எப்படி தன்னிச்சையாக இப்படி ஒரு நகர்வை முன்னெடுக்க முடியும் என்ற கேள்விகளையும் கடும் எதிர்ப்புகளையும் தமிழகத்தில் உள்ள முகாம்களில் வசிக்கும் மக்களிடம் ஏற்படுத்தியுள்ளது என முகாம்களில் தங்கி வாழும் இலங்கை தமிழர்களில் அக்கறைக் காட்டிவரும் அமைப்பின் முக்கியஸ்தராக திகழும் கஸ்தம்பாடி இலங்கைத் தமிழர் மறுவாழ்வு முகாமணீல் வாழும் டேவிட் அனோஜன் இவ்வாறு தெரிவித்துள்ளார்.



# வாழைச்சேனை அந்நூரில் இரத்ததான முகாம்



**(எச்.எம்.எம்.பர்ஸான்)**

வாழைச்சேனை அந்நூர் தேசிய பாடசாலை பிரதான மண்டபத்தில் இன்று (14) இரத்ததான முகாமொன்று இடம்பெற்றது. கோறளைப்பற்று மத்தி வாழைச்சேனை இளைஞர் கழக சம்மேளம், கோறளை மத்தி பிரதேச செயலகம் ஆகியவை இணைந்து இந்த இரத்ததான முகாமை ஏற்பாடு செய்திருந்தனர். இளைஞர் சேவை உத்தியோகத்தர் எஸ்.ஐ.எம்.பஸீல் தலைமையில் இடம்பெற்ற இவ் இரத்ததான முகாமில் அரச உத்தியோகத்தர்கள், பாடசாலை மாணவர்கள், ஆண்கள், பெண்கள் எனப்பலரும் கலந்து கொண்டு இரத்ததானம் வழங்கினர்.

# மா சதொசவுக்கு வந்ததும் மக்கள் கொள்முதல் செய்வதில் ஆர்வம்

**( வாஸ் கூஞ்ஞ)**

மன்னார் பகுதியில் தற்பொழுது சதொச கிளைகளில் மாவின் விலை குறைக்கப்பட்ட நிலையில் விற்பனை செய்யப்படுவதால் பலர் மாவை கொள்முதல் செய்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். இருந்தபோதும் மட்டுப்படுத்தப்பட்ட நிலையிலேயே விற்பனை செய்யப்படுகின்றது.

அண்மைகாலமாக மன்னார் பகுதியில் மா தட்டுப்பாடு நிலவி வந்தபோதும் வெளி சந்தைகளில் ஒரு கிலோ 400 ரூபாவுக்கு மேலாகவே விற்பனை செய்யப்பட்டு வந்ததாக நுகர்வோர் தெரிவித்தனர். ஆனால் தற்பொழுது சதொசவுக்கு மா வந்திறங்கியதுடன் ஒரு கிலோ மா 310 ரூபா வீதம் விற்பனை செய்யப்படுவதால் பலர் கியூ வரிசையில் நின்று மாவை பெற்றுக் கொள்வதில் ஆர்வம் காட்டி வருகின்றனர். அதேவேளையில் மன்னார் பகுதி சதொச கிளைகளில் ஒரு நபருக்கு மூன்று கிலோ மா வீதமே வழங்கப்பட்டு வருகின்றது என்பதும் குறிப்பிடத்தக்கது.

அண்மையில் மா விலை அதிகரிக்கப்பட்டபோதும் மன்னார் பகுதியில் ஒரு இறாத்தல் பாண் 200 ரூபாவுக்கே தற்பொழுது தொடர்ந்து விற்பனை செய்யப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. ஆனால் பிறிமா மா பேக்கறிகளுக்கு விநியோகம் செய்யப்பட்டு வருகின்றபோதும் பேக்கறிகளுக்கு போதியளவு மா விநியோகம் செய்யப்படுவதில்லையென பேக்கறி உரிமையாளர்கள் கவலை தெரிவிக்கின்றனர்.
இருந்தபோதும் இவர்கள் வெளிச் சந்தையில் ஒரு கிலோ மா 410 ரூபா தொடக்கம் 420 ரூபா வரைக்கும் வாங்கியே பேக்கறிகளில் பாண் உற்பத்தி செய்து ஒரு இறாத்தல் 200 ரூபாவுக்கே விற்பனை செய்து வருவதாகவும் பேக்கறி உரிமையாளர்கள் தெரிவிக்கின்றனர்.

# இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஜப்பான் தூதுவரை சந்திப்பு



**தலவாக்கலை பி.கேதீஸ்**

இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் குழுவினர் ஜப்பான் நாட்டின் இலங்கைக்கான தூதுவர் மிசுகோஷி ஹிடேகி அவர்களை (13) இலங்கை ஜப்பான் தூதரகத்தில் சந்தித்து கலந்துரையாடினர். நாடு எதிர் நோக்கியுள்ள பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்டெடுப்பதற்கு ஜப்பான் அரசாங்கம் பல உதவிகளை மேற்கொண்டு வருகின்றது.அதே நேரத்தில் அண்மையில் மறைந்த ஜப்பானின் முன்னாள் பிரதமர் ஷின்சோ அபே மறைவுக்கு இ.தொ. காவின் தூது குழு இச் சந்திப்பின் போது அதன் இரங்கலை தெரிவித்தது. அத்துடன் எதிர்வரும் காலங்களில் மலையகத்தில் ஜப்பான் அரசாங்கத்தினூடாக முன்னெடுக்கப்படும் வேலைத்திட்டங்களை செயற்படுத்தவும்,திறன் மற்றும் தொழில் சார்ந்த கல்வி முறைகளை உருவாக்குவது தொடர்பில் ஜப்பான் நாட்டு தூதுவரின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. அத்தோடு ஜப்பான் நாட்டிற்கான தொழில்வாய்ப்பு தொடர்பாகவும் இச் சந்திப்பின் போது விரிவாக கலந்துரையாடப்பட்டது. மேலும் நாட்டின் தற்போது நிலவும் பொருளாதார நெருக்கடி நிலையில் ஜப்பான் அரசாங்கத்தின் நட்பு ரீதியான உதவிகளுக்கும் இதன் போது இ.தொ.கா தூது குழு நன்றி தெரிவித்தனர்.இச்சந்திப்பில் இடம்பெற்ற கலந்துரையாடலில் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் பொதுச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ஜீவன் தொண்டமான்,தலைவர் செந்தில் தொண்டமான், சட்டத்தரணி மாரிமுத்து, இ.தொ.காவின் சிரேஷ்ட உறுப்பினர் மதியுகராஜா, கட்சியின் உபதலைவரும் வெளி விவகாரங்களுக்கு பொறுப்பான பாரத் அருள்சாமி உட்பட பலர் கலந்துக்கொண்டனர்.

# புதிய சமுர்த்தி பயனாளிகளுக்கு அறிவிப்பு



சமுர்த்தி உள்ளிட்ட அரசாங்கத்தின் சலுகைகளை எதிர்பார்க்கும் மக்களிடம் இருந்து விண்ணப்பங்களை பெற்றுக்கொள்ளும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதன்படி சமுர்த்தி, முதியோர், ஊனமுற்றோர் மற்றும் சிறுநீரக உதவித்தொகை கோரும் மக்கள் கிராம உத்தியோகத்தர் அலுவலகங்கள் ஊடாக பிரதேச செயலகங்களில் விண்ணப்பங்களை சமர்ப்பிக்க முடியும் என சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி தெரிவித்தார்.

சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், விவசாய ஆராய்ச்சி மற்றும் உற்பத்தி உதவியாளர், அபிவிருத்தி உத்தியோகத்தர் மற்றும் கிராம உத்தியோகத்தர் ஆகிய தமது கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலுள்ள எந்தவொரு உத்தியோகத்தர் ஊடாகவும் விண்ணப்பத்தை அனுப்பி வைக்க முடியும் என அவர் கூறினார். எதிர்வரும் 30ஆம் திகதி வரை இதற்கான கால அவகாசம் வழங்கப்பட்டுள்ளது. தற்போது அரச கொடுப்பனவுகளைப் பெறும் அனைவரும் இந்த விண்ணப்பத்தை அனுப்பிவைக்க வேண்டுமென சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் பந்துல திலகசிறி கேட்டுக் கொண்டுள்ளார்.

# வரலாற்றில் கட்டுமுறிவுக்குளம் பாடசாலையை திரும்பிபார்க்க வைத்த தேசிய மட்டம்







**க.ருத்திரன்**

மட்டக்களப்பு மாவட்டத்தின் எல்லைக் கிராமத்தில் அமைந்துள்ள கட்டுமுறிவுக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை வரலாற்றில் முதல்தடவையாக விளையாட்டு வீரர்களின் திறமையின் வெளிப்பாடுகாரணமாக குறித்த கட்டுமுறிவுக்குளம் பாடசாலையை அனைவரும் திரும்பிபார்க்கும் அளவிற்கு தற்போது மாறியுள்ளது. கல்குடா கல்வி வலய வாகரைக்கோட்டத்திற்குப்பட்ட கட்டுமுறிவுக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலையிலிருந்து 17 வயதுக்குப்பட்ட பெண்கள் பிரிவில் உதைப்பந்தாட்ட போட்டியில் மாகாண மட்டத்தில் முதலாம் இடத்தினைப்பெற்று தேசிய மட்டம் தெரிவாகியுள்ளனர். குறித்த பாடசாலையானது மிக மிக அதிகஸ்ட பாடசாலையாக காணப்படுவதுடன் கதிரவெளி பிரதான வீதியிலிருந்து சுமார் 20 கிலோமீற்றருக்கு அப்பால் காடுகள் நிறைந்ததொரு பகுதிக்கு எல்லையில் அமைந்துள்ள பாடசாலையில் இருந்து உதைப்பந்தாட்ட போட்டியில் வலயம் மற்றும் மாகாண மட்டத்திலும் முதலாமிடம் பெற்று தேசியத்தில் கால்தடம்பதிக்கவுள்ளனர்.

இப்படியானதொரு கிராமத்திலுள்ள பாடசாலையிலிருந்து உதைப்பந்தாட்ட போட்டிக்கு தெரிவாகியுள்ள மாணவர்களுக்கு இதுவரைக்கும் நிரந்தர உதைப்பந்தாட்ட பயிற்றுவிற்பாளர் இல்லாமலே இவ்வாறு தேசியமட்டம் வரை செல்வதற்கு தகுதிபெற்றிருக்கின்றார்கள் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. பாடசாலையின் அதிபர் ஜீ.ஜீவனேஸ்வரன் இங்கு கூறிப்பிடுகையில்இ கட்டுமுறிவுக்குளம் பாடசாலையில் விளையாட்டுத்துறை சார்ந்து மாணவர்களை முன்னேற்றுவதற்கும் ஊக்குவிற்பதற்கும் எவ்விதமான அடிப்படைவசதிகள் இல்லாத நிலையில் பாடசாலை சமூகம்இ பழைய மாணவர்கள் ஆகியவற்றின் ஒத்துழைப்பு காரணமாகவே உதைபந்தாட்டத்தில் தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர். அத்துடன் எமது பாடசாலை மாணவர்களுக்கு விளையாட்டில் நல்ல ஆர்வமுள்ளதுடன் திடகாத்திரமான மனத்தையிரியமும் உண்டுஇ நகர பாடசாலைகளைப் போன்று தேவையயான வளங்கள் கிடைக்கப்பெற்றால் விளையாட்டுதுறைசார் வெற்றிகளை வலயத்திற்கும் மாவட்டத்திற்கும் தேசியத்திற்கும் கொண்டுவரமுடியுமொன்பதில் மாற்றுக்கருத்தில்லை என அதிபர் மேலும் தெரிவித்தார். உண்மையில் கிரிகட்டில் ஆசிய கிண்ணத்தை வெற்றிபெற்ற இலங்கை அணியினை பட்டிதொட்டியிலுள்ள நாம் பாராட்டுகின்றோம்இ கொண்டாடுகின்றோம்இ இவ்வாறான மாவட்டத்தின் எல்லையியுள்ள அதிகஸ்டப் பிரதேசத்தில் கல்வி கற்று விளையாட்டுத்துறை ஊடாக தெரிவு செய்யப்பட்டவர்களை நம்மில் பலர் மறந்துவிடுகின்றோம் என்பது நிதர்சனம். குறித்த கட்டுமுறிவுக்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை மாணவர்கள் உதைப்பந்தாட்டத்தில் தேசிய மட்டத்திற்கு தெரிவாகியுள்ளனர் என அறிந்த கட்டுமுறிவுக்குளம் மற்றும் ஆண்டாங்குளம் கிராம மக்கள் மற்றும் வாகரை கோட்டத்திலுள்ள பாடசாலைகளின் அதிபர்கள் தங்களுடைய மாணவச் செல்வங்களை வாழ்த்தி வரவேற்றனர். வெற்றி பெற்ற மாணவர்கள் உழவு இயந்திரத்தில் தங்களுடைய கட்டுமுறிவுக்குளம் பாடசாலையை அடைந்ததும் மாணவர்களுக்கு பாடசாலை சமூகம் மற்றும் கிராமமக்கள் வெற்றிபெற்ற மாணவர்களுக்கு உற்சாக வரவேற்புகொடுத்து வரவேற்றிந்தமை குறிப்பிடத்தக்கது.



# பாதை சீரின்மையால் பாடசாலை பஸ் சேவை நிறுத்தம் : மாணவர் முதல் மக்கள் பெருந்துயரம்



**(வி.ரி. சகாதேவராஜா)**

திருக்கோவில் பிரதேசத்திற்கு உட்பட்ட பின்தங்கிய தங்கவேலாயுதபுரம் கிராமத்துக்கான பிரதான பாதை குன்றும் குழியுமாக இருப்பதால் அங்கு சேவையீடுபட்ட ஒரேயொரு பஸ் சேவையும் நிறுத்தப்பட்டுள்ளது.. அக்கரைப்பற்று பஸ் டிப்போவால் திருக்கோவிலில் இருந்து தங்கவேலாயுதபுரம் கிராமத்திற்கான பஸ் சேவை தினமும் இரண்டு தடவைகள் இடம்பெற்று வந்தன. இவ்வேளையில் அக்கரைப்பற்று பொத்துவில் பிரதான பாதையில் தாண்டியடி சந்தியிலிருந்து தங்கவேலாயுதபுரம் செல்வதற்கான 12 கிலோமீட்டர் தூர ஒரேயொரு பிரதான வீதி மிகவும் மோசமாக சேதமடைந்துள்ளது..

மண்ஏற்றும் கனரக வாகனங்கள் தொடர்ச்சியாக இப்பாதையை பயன்படுத்தியதன் காரணமாக இப் பாதை இவ்வாறு படுமோசமாக பாதிக்கப்பட்டிருக்கலாமென கூறப்படுகிறது. இதனால் இருந்த ஒரேயொரு பஸ் சேவையும் நிறுத்தப்பட்டு இருக்கின்றது . இதனால், மாணவர்களும் விவசாயிகளும் பொதுமக்களும் மிகவும் பாதிக்கப்பட்டு இருக்கின்றார்கள். அவர்கள் இந்த பன்னிரண்டு கிலோமீட்டர் தூரத்தை கால்நடயில் நடந்தே பயணிக்க வேண்டிய துர்ப்பாக்கிய நிலை ஏற்பட்டுள்ளது.

வீதி அபிவிருத்தி திணைக்களம் இந்த பாதையை செப்பனிட பத்தாயிரம் கிலோ மீட்டர் வீதி அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கேள்வி அறிவித்தல் போடப்பட்டது. ஆனால் அரசாங்கத்தின் சமகால பொருளாதார நெருக்கடி காரணமாக அது கைவிடப்பட்டது. இப் பிரதேசத்தில் 12000 ஏக்கர் வயல் காணிகளும் இருக்கின்றன. அவற்றுக்கு செல்கின்ற விவசாயிகள் மக்கள் கால்நடையாக செல்ல வேண்டியிருக்கின்றது. இந்த அவல நிலையை கருத்தில் கொண்டு திருக்கோவில் பிரதேச செயலாளர் தங்கையா கஜேந்திரன் ஏனைய நிறுவனங்களிடம் இருந்து நிதி பெற்று இந்த வதியை செப்பனிட நடவடிக்கை எடுத்து வருவதாக தெரிகின்றது. தங்கவேலாயுதபுரம் பாடசாலைக்கு செல்கின்ற மாணவர்களும் ஆசிரியர்களும் மிகவும் சிரமத்திற்கு உள்ளாக இருப்பதாக திருக்கோயில் வலய கல்வி பணிப்பாளர் யோகேந்திரா ஜெயச்சந்திரன் தெரிவித்தார்.

# மட்டக்களப்பு மாவட்ட விவசாய அமைப்பு மட்டக்களப்பு ஆயருடன் சந்திப்பு



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு சிவில் சமூகத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயர் கலாநிதி பொன்னையா ஜோசப் அவர்களுக்கும் மட்டக்களப்பு மாவட்ட வர்த்தக கைத்தொழில் விவசாய சம்மேளனம் மற்றும் மட்டக்களப்பு மாவட்ட தமிழ் விவசாய சமூகத்திற்கும் இடையிலான சந்திப்பு (13) திகதி சாள்ஸ் மண்டபத்தில் இடம்பெற்றுள்ளது. இதன்போது விவசாயிகள் எதிர்நோக்கும் மிக முக்கிய பிரச்சனைகளாக காணப்படும் எரிபொருள் தட்டுப்பாடு, விவசாய உள்ளீடுகளை பெற்றுக்கொள்வதில் உள்ள தாமதம் மற்றும் நெல்லுக்கான நியாயமான விலையை தீர்மானித்தல் போன்ற பல விடயங்கள் தொடர்பாக இதன்போது ஆயருடன் கலந்துரையாடப்பட்டுள்ளது. ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பீடும் போது மட்டக்களப்பு மாவட்டமே முந்திய விவசாய நடவடிக்கைகளை மேற்கொள்கின்ற மாவட்டமாக காணப்படுவதை விவசாயிகள் சுட்டி காட்டியதுடன் உரிய காலத்தினுள் உள்ளீடுகள் தரப்படுமையானால் சிறந்த விளைச்சளை பெற்றுக்கொள்ளமுடியும் என தெரிவித்ததுடன் உரிய அரசியல் வாதிகள் உரிய நடவடிக்கையினை மேற்கொண்டு தமக்கு தேவையானவற்றை பெற்றுக்கொடுக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும் என்பது தொடர்பாகவும் குறித்த கலந்துரையாடலின் போது வேண்டுகோள் முன்வைக்கப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

## மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள 105 கலை மன்றங்கள்

# கிழக்கு மாகாணத்தினால் மீள்பதிவு



**(எஸ்.எஸ்.அமிர்தகழியான்)**

மட்டக்களப்பு மாவட்டத்தில் செயற்பட்டு வருகின்ற கலை மன்றங்களை புதிதாக பதிவு செய்தல் அல்லது மீள் பதிவு செய்யும் நடவடிக்கை துரிதமாக இடம்பெற்று வருகின்றன கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் பிரதேச ரீதியில் செயற்பட்டு வரும் கலை மன்றங்களை பதிவு செய்து அவற்றுக்கான ஊக்குவிப்பு வசதிகளை வழங்குவது தொடர்பாக கழகங்களுக்கு தெழிவுபடுத்தும் கூட்டம் மண்முனைப்பற்று பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நேற்று மாலை (13) இடம்பெற்றது.

கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்கள மாகாண பணிப்பாளர் திருமதி. சரன்யா சுதர்சனின் வழிகாட்டலின்கீழ் மாவட்ட காசார இணைப்பாளர் ரீ. மலர்ச்செல்வன் தலைமையில் இடம்பெற்ற இந்நிகழ்வில் மண்முனை மேற்கு, மண்முனை வடக்கு, மண்முனைப்பற்று, காத்தான்குடி, மண்முனை தென்மேற்கு, போரைதீவுப்பற்று, மண்முனை தென் எருவில் பற்று ஆகிய 7 பிரதேச செயலகப் பிரிவுகளுக்குட்பட்ட கலா மன்றங்களின் பிரதிநிதிகள் மற்றும் காலாசார உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.

இம் மாவட்டத்தில் செயற்பட்டுவரும் 105 கலா மன்றங்களின் செயற்பாடுகளை வினைத்திறன் மிக்கதாக ஆக்க கிழக்கு மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் மாதாந்த நிதி உதவிகளை வழங்க மாகாண பணிப்பாளர் திருமதி. சரன்யா சுதர்சனால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை கலாமண்றங்கள் கடந்த காலங்களைப் போலல்லாது புத்துணர்ச்சியுடன் செயற்படவேண்டும் எனவும், கலைகளினூடாக சமுகத்திற்கு பயனுள்ள செய்திகளை கொண்டு சேர்ப்பதுடன், பாரம்பரிய மற்றும் மருவிவரும் கலைகளைப் பாதுகாத்து அடுத்த சந்ததியினருக்கு அதனைக் கையளிக்க வேண்டும் எனவும் கேட்டுக்கொள்ளப் பட்டுள்ளனர். இப்பணிகளுக்குத் தேவையான ஒத்துளைப்புக்கள் மாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தினால் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. இதேபோன்று கோறளைப்பற்று வடக்கு, கோறளைப்பற்று மத்தி, கோறளைப்பற்று மேற்கு, கோறளைப்பற்று, கோறளைப்பற்று தெற்கு, ஏறாவூர் பற்று, ஏறாவூர் நகர் ஆகிய 7 பிரதேச செயலகப் பிரிவிற்குட்பட்ட கலை மன்றங்களுக்கான தெழிவூட்டல் நிகழ்வு கிரான் ரெஜி மண்டபத்தில் இன்று காலைவேளயில் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.

# கல்முனை மனித உரிமை ஆணைக்குழு காரியாலயத்தின் முன் ஆர்ப்பாட்டம்




**(வி.ரி.சகாதேவராஜா)**

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு கல்முனைப் பிராந்திய காரியாலயம் முன்பாக நேற்று(14) புதன்கிழமை ஆர்ப்பாட்டம் ஒன்று இடம் பெற்றது. வடக்கு கிழக்கு ஒருங்கிணைப்பு குழு ஏற்பாடு செய்த அந்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கான உறுப்பினர்கள் பதாகைகளுடன் கலந்து கொண்டார்கள். யாழ்ப்பாணத்தில் உள்ள மனித உரிமை போரம் மற்றும் திருகோணமலை யில் உள்ள மனிதாபிமான வள நிலையம் ஆகிய அலுவலகங்கள் உடைக்கப்பட்டு அங்குள்ள ஆவணங்கள் திருடப்பட்டமைக்கு எதிர்ப்பு தெரிவித்து ஆர்ப்பாட்டம் நேற்று நடைபெற்றது. ஆர்ப்பாட்டத்தில் இறுதியில் மனித உரிமை ஆணைக்குழு கல்முனைப் பிராந்திய காரியாலயத்தில் மகஜர் ஒன்றும் ஆர்ப்பாட்டக்காரர்களால் கையளிக்கப்பட்டது.. யாழ்ப்பாணம் மற்றும் திருகோணமலை மாவட்ட சிவில் அமைப்புக்களின் அலுவலகங்கள் உடைக்கப்பட்டு முக்கிய ஆவணங்கள் எடுத்துச் செல்லப்படுதல் மற்றும் சிவில் அமைப்புப் பிரதிநிதிகள் அச்சுறுத்தப்படுவதற்கு எதிரான கவனயீர்ப்பும் மகஜர் கையளிப்பும். இலங்கையின் பல பாகங்களிலும் ஜனநாயகப் போராட்டங்களில் ஈடுபடும் சிவில் அமைப்புப் பிரதிநிதிகள், ஊடகவியலாளர் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் திட்டமிட்ட வகையில் அச்சுறுத்தப்படுவதும் தாக்குதல்களுக்கு உள்ளாக்கப்படுவதும் இடம்பெற்றுக் கொண்டு செல்லுகின்ற வேளையில் அண்மைக்காலமாக வடக்கு கிழக்கு மாகாணங்களில் உரிமை தொடர்பாக பணியாற்றுகின்ற சிவில் அமைபக்களும்,ஊடகவியலாளாகள் மற்றும் பாதிக்கப்பட்டுள்ள மக்கள் தொடர்ச்சியான கண்காணிப்பிற்குள்ளாக்கப்படுவதும், அச்சுறுத்தப்படுவதும் இடம்பெற்றுக் கொண்டு இருக்கின்றது. அதுமட்டுமன்றி சிவில் அமைப்புக்களின் அலுவலகங்கள் உடைக்கப்பட்டு முக்கியமான ஆவணங்கள் எடுத்துச் செல்லப்படுகின்ற நிலைமைகள் தொடர்ச்சியாக இடம்பெற்றுக் கொண்டு போகின்றது. ஆகையால் மேற்படி விடயங்கள் சிவில் அமைப்புக்களுக்கோ, பாதிக்கப்பட்ட மக்களுக்கோ, ஊடகவியலாளர்களுக்கோ இடம்பெறக் கூடாது என வலியுறுத்தி மேற்படி ஆர்ப்பாட்டம் இடம் பெற்றது.

# வாகரையில் திண்மக் கழிவகற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு



**(ரக்ஸனா)**

சமூக அபிவிருத்திக்கு சூழலை தூய்மையாக வைத்திருப்போம் திட்டத்தின் கீழ் வாகரையில் ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான திண்மக் கழிவகற்றல் உபகரணங்கள் வழங்கி வைப்பு. சமூக அபிவிருத்திக்கு சூழலை தூய்மையாக வைத்திருப்போம் எனும் திண்மக் கழிவகற்றல் முகாமைத்துவத் திட்டத்தின் கீழ் வாகரையில் ஒரு மில்லியன் ரூபாய் பெறுமதியான திண்மக் கழிவகற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டுள்ளதாக இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் தங்கராஜா திலீப்குமார் தெரிவித்தார். வாகரைப் பிரதேசத்தை ஊடறுத்துச் செல்லும் திருகோணமலை – மட்டக்களப்பு நீண்ட நெடு வீதியில் பொதுமக்கள் ஒன்று கூடுமிடங்கள், பஸ் நிலையங்கள், சந்தை, அரச கட்டிடங்கள் உள்ளிட்ட இடங்களில் திண்மக் கழிவுகளைச் சேகரிப்பதற்காக 21 கழிவு சேகரிப்புத் தொட்டிகள் வாகரைப் பிரதேச செயலகத்தில் புதனன்று 14.09.2022 கையளிக்கப்பட்டுள்ளன. கையளிப்பு நிகழ்வில் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவனத்தின் திட்ட முகாமையாளர் திலீப்குமார் சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்) நிறுவனத்தின் இலங்கைக்கான பணிப்பாளர் தேவசிங்கம் மயூரன் வாகரைப் பிரதேச செயலாளர் ஜி. அருணன், திட்டமிடல் உதவிப் பணிப்பாளர் ஏ. சுதாகரன் உள்ளிட்டோரும் இளைஞர் அபிவிருத்தி அகம் நிறுவன அலுவலர்களும் கலந்து கொண்டனர்.

சுவீடன் சர்வதேச அபிவிருத்திக்கான ஒத்துழைப்பு (வீ எபெக்ற்), கொகாகோலா பவுண்டேஷன், இளைஞர் அபிவிருத்தி அகம் ஆகியவை கூட்டிணைந்து இத்திட்டத்தை முன்னெடுத்துள்ளன. வாகரை பிரதேரச செயலகம், கோறளைப்பற்று வடக்கு வாகரைப் பிரதேச சபை மற்றும் சமூக மட்ட பிரதேச மக்களின் முழுமையான பங்கேற்புடன் இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுவதாக திலீப்குமார் மேலும் தெரிவித்தார். உக்கும், உக்காத, கண்ணாடி, மற்றும் பிளாஸ்ரிக் என கழிவுகள் நான்கு பிரிவாக வகைப்படுத்தப்பட்டு சேகரிக்கப்படவுள்ளன. இதேவேளை மீள் சுழற்சிக்குட்படுத்தக் கூடிய ஒரு வகை பிளாஸ்ரிக் குடிபான போத்தல்களும் கொடுப்பனவு செய்து சேகரிக்கப்படவுள்ளதாக திலீப்குமார் தெரிவித்தார். நிலைபேறான சமூக அபிவிருத்தியை நோக்கமாகக் கொண்டே இந்தத் திட்டம் அமுல்படுத்தப்படுவதாகவும் அவர் கூறினார்.

# மாகாண மட்ட உதைபந்தாட்ட போட்டியில் கல்முனை உவெஸ்லி தேசியமட்டத்திற்கு தெரிவு



**(எம்.எஸ்.எம்.ஸாகிர்)**

20 வயது பெண்களுக்கான மாகாணமட்ட உதைப்பந்தாட்ட போட்டிகள் கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை மைதானத்தில் (12) நடைபெற்றது. இதில் பங்குபற்றிய கல்முனை உவெஸ்லி உயர்தர பாடசாலை (தேசிய பாடசாலை) அணியினர் இரண்டாம் இடத்தைப் பெற்று, அகில இலங்கை தேசியமட்ட போட்டிக்குத் தெரிவு செய்யப்பட்டனர். வெற்றியீட்டிய மாணவர்களுக்கு பாடசாலை அதிபர் எஸ். கலையரசன் தனது வாழ்த்துக்களைத் தெரிவித்துள்ளார்.

# சதுரங்க விளையாட்டுப் பயிற்சி முகாம்



**(அ . அச்சுதன்)**

திருகோணமலைக் கல்வி வலயத்தின் கீழ் சதுரங்க விளையாட்டுப் போட்டியினை வலுப்படுத்தும் நோக்கில் பயிற்சி முகாமானது திருகோணமலை வலயக்கல்விப் பணிப்பாளர் சிவானந்தம் சிறீதரன் அவர்களது ஏற்பாட்டில் இன்றும் நாளையும் (14, 15) காலை 08 மணி முதல் பிற்பகல் 04 மணி வரையும் தி/தி/ இந்துக் கல்லுரியின் ஆரம்பப்பிரிவில் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர் உ.நு.ஆ.று.பு. திஸ்ஸ ாநாயக அவர்கள் பிரதம அதிதியாகக் கலந்துகொள்ள முதல் நாள் நிகழ்வு இன்று (14) ஆரம்பமானது.

# மதகுருவை விளக்கமறியலில் வைக்க உத்தரவு




**பாறுக் ஷிஹான்**

இளம் பிக்குகளை பாலியல் துஸ்பிரயோகம் செய்த பௌத்த மதகுருவை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது. அம்பாறை மாவட்டம் கல்முனை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஹாரை ஒன்றில் வைத்து 3 இளம் பிக்குகள் பாலியல் துஸ்பிரயோகம் செய்தமை தொடர்பில் நேற்று (13)கல்முனை நீதிமன்ற நீதிவான் முன்னிலையில் விசாரணைக்கு எடுத்து கொள்ளப்பட்ட நிலையில் சந்தேக நபரான பௌத்த மதகுருவை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிமன்ற நீதிவான் உத்தரவிட்டார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் 3 இளம் பிக்குகளை கல்முனை பகுதி விஹாரை ஒன்றில் வைத்து பாலியல் துஸ்பிரயோகம் செய்த பௌத்த மதகுருவை கைது செய்ய பொலிஸாரினால் நடவடிக்கை மேற்கொள்ளபட்டிருந்தது. அம்பாறை மாவட்டம் கல்முனை தலைமையக பொலிஸ் பிரிவிற்குட்பட்ட விஹாரை ஒன்றில் புதிதாக இணைந்த 3 இளம் பிக்குகள் திடீர் சுகயீனம் அடைந்துள்ளதாக தெரிவிக்கப்பட்டு கல்முனை ஆதார வைத்தியசாலையில் கடந்த மாதம்(ஆகஸ்ட்) இறுதி பகுதியில் இளம் பிக்குகளின் பெற்றோரினால் அனுமதிக்கப்பட்டிருந்தனர். பின்னர் குறித்த வைத்தியசாலை சட்ட வைத்திய அதிகாரியின் ஆலோசனைக்கமைய அம்பாறை பொது வைத்தியசாலையில் உள்ள பிக்குகளுக்கான தனியான சிகிச்சை பிரிவிற்கு 3 இளம் பிக்குகளும் வைத்திய பரிசோதனைக்காக மாற்றப்பட்டு சட்ட வைத்திய அதிகாரியிடம் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டிருந்தனர்.

இந்நிலையில் அம்பாறை பொது வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்ட 3 இளம் பிக்குகளும் தாம் பல்வேறு சந்தர்ப்பங்களில் தலைமை பௌத்த துறவியினால் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு ஆளாகிதாக குறிப்பிட்டிருந்தனர். இதனை அடுத்து குறித்த 3 இளம் பிக்குகளும் பாலியல் துன்புறுத்தலுக்கு உள்ளாகி இருப்பதாக சட்ட வைத்திய அதிகாரியும் தனது வைத்திய அறிக்கை ஊடாக அம்பாறை மாவட்ட சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகருக்கு குறிப்பிட்டிருந்தார். இதனை அடுத்து இச்சம்பவம் தொடர்பில் மருத்துவ அறிக்கை பிரகாரம் செப்டம்பர் 01 ஆம் திகதி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் பணிப்பின் பேரில் மாவட்ட சிறுவர் பெண்கள் விசாரணைப் பிரிவினர் வைத்தியசாலைக்கு சென்று விசாரணை மேற்கொண்டனர். இதன் பின்னர் குறித்த சம்பவ விசாரணை அறிக்கை சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகரின் அறிவுறுத்தலின் பிரகாரம் செப்டம்பர் 05 ஆந் திகதி கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்திற்கு அனுப்பட்டு சட்ட நடவடிக்கைக்காக தயார் படுத்தபட்டிருந்தது.

இதற்கமைய 3 இளம் பிக்குகள் துஸ்பிரயோகத்திற்கு உள்ளாகியதாக குற்றஞ்சாட்டப்பட்ட பிரதான சந்தேக நபராக கருதப்படும் பௌத்த மதகுரு தொடர்பில் இன்று கல்முனை நீதிவான் நீதிமன்றத்திற்கு அம்பாறை மாவட்ட சிறுவர் பெண்கள் விசாரணைப் பிரிவினர் அறிக்கை சமர்ப்பித்திருந்த நிலையில் பௌத்த மதகுருவை எதிர்வரும் செப்டம்பர் மாதம் 16 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு கல்முனை நீதிவான் நீதிமன்று உத்தரவிட்டுள்ளது.

மேலும் இச்சம்பவத்தினால் பாதிக்கப்பட்ட இளம் பிக்குகளின் பெற்றோர் ஏற்கனவே வழங்கிய முறைப்பாட்டிற்கமைய அம்பாறை பகுதியில் இருந்து வருகை தந்த விசேட பொலிஸார் இன்று கல்முனை பகுதியில் உள்ள குறித்த பௌத்த விஹாரைக்கு சென்று விசாரணை மேற்கொண்டதுடன் சந்தேக நபரான பிரதான பௌத்த மதகுருவிடம் வாக்குமூலங்களை பொலிஸார் பெற்று கைது செய்திருந்தனர். மேலும் பாலியல் துஸ்பிரயோகத்திற்கு உள்ளான சகோதரர்களான 08 , 13 , 14 இ வயது மதிக்கத்தக்க 3 இளம் பிக்குகளும் ஏற்கனவே அம்பாறை புறநகர் பகுதி ஒன்றியில் இருந்து துஸ்பிரயோகத்திற்கு உள்ளாக்கப்பட்ட நிலையில் அண்மையில் கல்முனை பகுதியில் உள்ள பௌத்த விஹாரைக்கு புதிதாக இணைக்கப்பட்டிருந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கதாகும். குறித்த சம்பவத்தில் பொலிஸாரினால் சந்தேக நபராக இனங்காணப்பட்ட பிரதான பௌத்த மதகுரு கல்முனை உப பிரதேச செயலகம் தரமுயர்த்த படுதல் தொடர்பில் உண்ணாவிரதம் மேற்கொண்டிருந்தவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

மேலும் அம்பாறை மாவட்டத்தில் நீண்ட காலமாக கல்முனை சுபத்ரா ராமய விகாராதிபதியாக ரண்முத்துக்கல சங்கரத்ன தேரர் செயற்பட்டு வருவதுடன் கல்முனை பிராந்தியத்தில் உள்ள ஒரே ஒரு விஹாரையாக செயற்பட்டு வருகின்றமை சுட்டிக்காட்டத்தக்கது.

# ஹெரோயின் போதைப்பொருளுடன் சந்தேக நபர் கைது



**பாறுக் ஷிஹான்**

ஹெரோயின் போதைப்பொருளை தம்வசம் வைத்திருந்த சந்தேக நபர் கல்முனை விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டார். அம்பாறை மாவட்டம் கல்முனை விசேட அதிரடிப்படை முகாமிற்கு கிடைக்கப்பெற்ற இரகசிய தகவல் ஒன்றினை அடுத்து செவ்வாய்க்கிழமை(13) இரவு நிந்தவூர் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட கடற்கரை வீதியில் வைத்து விசேட அதிரடிப்படையினர் மேற்கொண்ட தேடுதலில் சந்தேக நபர் கைதானார். இவ்வாறு கைதான நபர் நிந்தவூர் 9 பகுதியை சேரந்த 36 வயது மதிக்கத்தக்கவர் என்பதுடன் சந்தேக நபர் வசம் இருந்து ஹெரோயின் போதைப்பொருள் 3 கிராம் 600 மில்லிகிராம் விசேட அதிரடிப்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளது.

இச்சோதனை நடவடிக்கையின் போது விசேட அதிரடிப்படையின் கட்டளை அதிகாரி பிரதிப் பொலிஸ் மா அதிபர் வருண ஜெயசுந்தரவின் பணிப்புரைக்கமைய அம்பாறை வலயக்கட்டளை அதிகாரி சிரேஸ்ட பொலிஸ் அத்தியட்சகர் சில்வெஸ்டர் விஜேசிங்கவின் அறிவுறுத்தலுக்கமைய மாவட்ட உதவி பொலிஸ் அத்தியட்சகர் டி.சி வேவிடவிதான வழிகாட்டலில் கல்முனை விசேட அதிரடிப்படை முகாம் பதில் பொறுப்பதிகாரி பொலிஸ் பரிசோதகர் எஸ்.எம்.பி.பி. எம் டயஸ் தலைமையிலான பொலிஸ் சார்ஜன்ட்களான பண்டார (13443) , வீரகோன் (33354), ராஜபக்ச (24812), பொலிஸ் கன்டபிள்களான சந்திரரட்ண (90669), நிமேஸ்(90699) , சாரதி குணபால (19401) அதிகாரிகள் இந்நடவடிக்கையை முன்னெடுத்து சந்தேக நபரை கைது செய்தனர். பின்னர் கைது செய்யப்பட்ட நபர்கள் சான்று பொருட்களுடன் நிந்தவூர் பொலிஸாரிடம் விசேட அதிரடிப்படையினர் நீதிமன்ற நடவடிக்கைக்காக பாரப்படுத்தியமை குறிப்பிடத்தக்கது.

# கிழக்கு மக்களிற்கு வரப்பிரசாதமாக மாறிவரும் கிழக்கு பல்கலைக்கழகம்

**(கல்லடி நிருபர் - சுதா)**



மட்டக்களப்பு மக்களுக்கான ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையமொன்று கிழக்கு பல்கலைக்கழகத்தின் பிள்ளையாரடியில் அமைந்துள்ள சௌக்ய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தில் திறந்து வைக்கப்பட்டுள்ளது. 106 மில்லியன் ரூபா செலவில் நிர்மானிக்கப்பட்டுள்ள குறித்த ஆரம்ப சுகாதார பராமரிப்பு நிலையத்தின் திறப்பு விழா நேற்றுமுந்தினம் (12) திகதி கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தலைமையில் மிகச்சிறப்பாக இடம்பெற்றுள்ளது.

ஆரம்ப சுகாதார பராமரிப்பு துறையின் துறைத்தலைவரும் உருவாக்குனருமான வைத்திய கலாநிதி கே.அருளானந்தம் தனது வரவேற்புரையில் நிலையத்தின் நான்கு பிரதான தொழில்பாடுகள் பற்றி விரிவாக விளக்கமளித்திருந்தார். ஆரம்ப சுகாதார பராமரிப்பு மற்றும் நோய் முகாமைத்துவம், சவுக்ய நிலை முன்னேற்றம் மற்றும் நோய் தடுப்பு, கற்பித்தல் மற்றும் பயிற்சி அத்துடன் ஆராய்ச்சி மற்றும் புதுமைகளை புகுத்தல் எனும் பெரும் பகுதிகள் தொடர்பாகவும் விரிவாக விளக்கமளித்திருந்தார். தொடர்ந்து பீடாதிபதி கலாநிதி ரீ.சதானந்தன் தனதுரையில் இன்றைய நாள் ஓர் சிறப்பான நாள் இந்நிலையத்தை உருவாக்கியத்தில் பலரின் பங்களிப்புள்ளது, அவர்கள் அனைவரும் பெருமைப்படும் வண்ணமாக இந்த மையம் பணியாற்றவுள்ளது எனவும் சௌக்கிய பராமரிப்பு விஞ்ஞான பீடம் இதனால் பெருமை அடைகின்றதெனவும் குறிப்பிடடார்.

தொடர்ந்து சிறப்புரையாற்றிய கிழக்கு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம் தனதுரையில் இது ஓர் நீண்ட கனவு நனவான சந்தர்ப்பம் எனவும் சமூகபராமரிப்பில் சேவை, கல்வி, பயிற்சி மற்றும் ஆராய்சசி எனும் பெரும் பகுதிகளை உள்ளடக்கி இம்மையத்தின்மூலம் வழிப்படுத்தப்படுவதில் இலங்கை பல்கலைக்கழகங்களில் நாமே முதன்மையானவர்களாக மாறியுள்ளோம் என குறிப்பிடடார். மேலும் இம் முழுமையான பராமரிப்பு மையம் கிழக்கு பல்கலைக்கழகத்தின் அடையாளமாக இருந்து பேராசிரியர்களின் சமூகம்சார் சிந்தனைகளை செயல்வடிவமாக்கும் ஓரிடமாக செயற்படும் என்பதில் ஐயமில்லை எனவும் தெரிவித்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் வல்லிபுரம் கனகசிங்கம், பதில் உபவேந்தர் வைத்திய கலாநிதி கே.கருணாகரன், முன்னாள் மட்டக்களப்பு மாவடட செயலாளர் திருமதி. காலமதி பத்தராஜா, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஜீ.சுகுணன், உதவி பிரதேச செயலாளர் திருமதி.சுதர்ஷினி, அயல் கிராமங்களின் தலைவர்கள், சவுக்கிய பராமரிப்பு விஞ்ஞானங்கள் பீடத்தின் துறை தலைவர்கள் விரிவுரையாளர்கள், கல்விசாரா அலுவலர்கள், மாணவர்கள் என பலரும் பங்குபற்றி சிறப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது. வைத்தியசாலைகள், வைத்திய அதிகாரிகள் பிரிவுகளின் சுகாதார பராமரிப்பு அலகுகள், கிராமமட்ட தாய் சேய் பராமரிப்பு நிலையங்கள் என்பவற்றையும் தாண்டி கிழக்குப் பல்கலைக்கழகம் முழுமையான ஆரம்ப சுகாதார பராமரிப்பு சேவையை சமூகத்திற்கு வழங்குவதென்பது மட்டக்களப்பு மக்களுக்கு கிடைத்துள்ள பொருங்கொடையாகவே தாம் பார்பதாக நிகழ்வில் கலந்து கொண்ட சமூக ஆர்வலர்கள் பலரும் கருத்துத் தெரிவித்திருந்தனர்.

